# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| துணர் உ௪ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௭௯ சருவதாரி—ஆவணி 1948—ஆகஸ்டு | மலர் ரு |

## பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

---

## இந்தியை எதிர்ப்பது முறையா?

நம் தமிழ் நாட்டில் சில நாட்களாக நடைபெற்று வரும் இந்தி எதிர்ப்பு முறையா என்னும் பொருள்மேல், முறைதானென்பார் கூற்றினைத் தமிழ்ப் பொழில் நான்காவது மலரில் சற்று விரிவாக எடுத்துக் கூறியிருந்தோம். இதுபோது அக் கூற்றினை மறுத்து இந்தி எதிர்ப்பு முறையல்லவென்பார் கட்சியைக் கூறுவோம்.

ஏனைய பல மொழிகள் வழங்கப்பட்டபோதெல்லாம் அவ்வம் மொழிச் சொற்கள் தமிழ் மொழியில் புகுந்து கலந்தது உண்டெனினும், தமிழ் மொழி தன் தனித் தன்மை இழக்கும்படி அத்துணைக் கலப்பு ஏற்படவில்லையே. அதுவேபோல இந்தி மொழிப் பயிற்சியினாலும் பல இந்திச் சொற்கள் தமிழிற் கலத்தல் கூடுமெனினும், அதனால் தமிழின் தூய்மைத் தன்மை கெடுதற்கில்லை. ஆதலால், இந்தி நுழைதலினால் தமிழுக்கு ஏதொரு கெடுதலும் நிகழாதென்று எடுத்துக் கூறுகின்றனர்.

இது நிற்க, வருங் காலத்தில் இந்தி மொழியானது அரசியல் மொழியாக விருக்கப் போகின்றது. தமிழ் மக்கள் இந்தி மொழியைப் பயிலாது இருக்க நேர்ந்தால், பின் அரசியல் அலுவல்களிலோ, முயற்சிகளிலோ, பிற செயல்களிலோ ஈடுபடுதற்குத் தடையாய், இந்தி பயின்று முன் னணியில் இருப்பார்க்குப் பின்னிட்டு, அவர்கள் முற் போக்குக் கண்டு பொருமை யுறுதற்கும் பொருட்டாகும். ஆதலின், இதனை முற்கூட்டியே உணர்ந்து, பிற்கால நிலையை ஆய்ந்து ஏனைய மக்களுடன் ஒத்து முன்னேறத் தமிழ் மக்களும் ஆயத்தமாயிருக்க வேண்டியது இன்றி யமையாத தல்லவா? ஆதலின், இந்தியை எதிர்ப்பது முறை யாகா தென்று எடுத்துக் கூறி வற்புறுத்துகின்றனர்.

இனி, மேல் நாடுகளி லெல்லாம் மக்களின் பிற்கால மேன்மையை எண்ணி, மாணவர்க்கு, அறிவு நூல்களுடன், தாய் மொழிப் பயிற்சி தருவதன்றி, ஏனைய பல மொழி களில், கிரீக், உரோமன் முதலிய பழமொழிகளில் ஒன்றும், பிரஞ்சு போன்ற பிற்கால மொழிகளில் ஒன்றும் படிப்பதும் வேண்டற் பால தென்று அப்படியே பயிற்றி வருகின்றனர். இத்தகைய பல மொழிப் பயிற்சி, மக்கள் பல வகையிலும் அறிவு பெறுதற்கும், விரிந்த நோக்கமும் பரந்த எண்ணமும் உண்டாதற்கும் வழியா யிருக்கின்றது. அங்ஙனம் மேல் நாட்டு இளம் பிள்ளைகள் குறைந்தது மூன்று மொழி யேனும் பயிலுதற்குக் கூடுமானதா யிருக்கும் பொழுது, நம் நாட்டுப் பிள்ளைகளும் மூன்று மொழி பயிலுவதால் கேடொன்று மில்லையே. அதனுல் இந்தியை எதிர்ப்பது முறையாகா தென்பதை வலியுறுத்துகின்றனர்.

இவ் விரண்டு வகையார் கொள்கைகளைப் பற்றிய ஆராய்ச்சிகளையும், நம் கருத்தினையும் அடுத்த இதழில் வெளியிடுவாம்.

(தொடரும்)

## நூன் மதிப்பு.

---

**அண்ணுமலைப் பல்கலைக் கழக வெளியீடு: வீரத் திரு. பேரறிஞர் மு. அண்ணுமலை அரசர் நினைவு மலர்.**

அரசர்க்கேற்ற இச் சிறந்த வெளியீடு கருத்திற்கேற்ற மேன்மையுடன் விளங்குகின்றது. ஏனைய கட்டுரைகளுடன் அரசரது லரலாற்றுச் சுருக்கமும், அருஞ் செயல் விளக்கமும், அன்பர் பரிவுரைகளும் கொண்டு விளங்குகின்றது. அரசர் அன்புத் திறத்திற்கு ஒத்து நன்கு வெளி வந்திருக்கிறது. வழக்கம் போல மற்றக் கட்டுரைகளும் பொருள் பொதிந்தனவா யிருக்கின்றன.

---

**தமிழ் இசை மலர்.**

வீரத் திரு. பேரறிஞர் மு. அண்ணுமலை அரசர் நினைவு வெளியீடு.

தமி ழிசைப் புரவலர் கருத்தில் தமி ழிசையும் தமி ழிசை வாணரும் எத்துணைச் சிறந்த இடம் பெற்றிருந்தனர் என்பதை இவ் வெளியீடு தெளிவாக விளக்குகின்றது. உண்மை யன்புடைய வள்ளலிடம் உள்ளன்புடைய தமிழிசையாளர் உருக்கப் புலம்பல் படிப்பவர் நெஞ்சை இளகச் செய்கின்றது. தமிழிசைப் புரவலர் பிரிவு, பொதுவாகத் தமிழ் நாட்டுக்கும், சிறப்பாகத் தமிழிசை நாட்டுக்கும் பெருந்துயர் விளைத்துள்ளது என்பதை இத் தமிழ் இசை மலரிலுள்ள பல தாள்களும் விளக்குகின்றன.

வழக்கம் போல இம் மலரும் பிற பல சிறந்த கட்டுரைகளைக் கொண்டிருக்கின்றது.

---

# நமது சங்கம்.

நமது சங்கத்தின் வளர்ச்சி கருதி, இச் சங்கத் தொண்டர்கள், சங்கப் பேரன்பர்கள் பலரையும் கண்டு, சங்கத்தின் சென்ற காலத் தொண்டுகள், நிகழ் காலத் தொண்டுகள், வருங்காலத் தொண்டுகள் முதலியவற்றையும், இச் சங்கத்தின் பொருள் வளர்ச்சிக் குரிய நிலைகளையும், அச்சு வேண்டுகோள் வாயிலாகவும், நேரிற் கூறும் உரை வாயிலாகவும் விளக்கி வருதலையும், அவைகளை அறிந்து மகிழும் சங்கப் பேரன்பர்கள் மன முவந்து பேருதவிகள் செய்து வருதலையும் பொழி லன்பர்கள் அறிந்து மகிழ்ந்து வருகின்றனர்.

இம் முயற்சி பற்றித் தொண்டர்கள், சங்க அன்பர்களைக் கண்டு அளவளாவுங்கால், இச் சங்கத்து உறுப்பினர், தொண்டர்களாம் பேரன்பர்களின் தாய்மொழிப் பற்றும், அது பற்றிய பொது நோக்கமும் உணரும் வாய்ப்பு இலாத அயலார் சிலர், நம் தொண்டர்கள்பால், சங்க உறுப்பினர்கள், கடவுட் கொள்கை, அரசியற் கொள்கை, குலக் கொள்கை, மொழிக் கொள்கை முதலாயவற்றில் மாறுபடுவோ ராகி, ஒற்றுமை இலராவர் என்றும், அதனனே சங்க வளர்ச்சி நெறிகள் தடையுறுகின்றன என்றும், தம் போல்வார் கூட்டுறவு கொள்வதற்கு இயலாமை உறுகின்ற தென்றும் கூறுவா ராயினர்.

இவ் வுரையினைப் பொருள் செய்யாது விடுதற்காம் உண்மை நிலையினைச் சங்கத் தொடர்பினை யுடைய பலரும் அறிவர். எனினும், நம் தமிழ்த் தாயின் மக்களாகிய அன்னோரும் உண்மை நிலையினை உணர்ந்து, சங்கத் தொடர்பினை உடைய ராகித் தாய்மொழித் தொண்டிற் கலந்து கொள்ளுமாறு, அன்னவர்கட்குப் பின்வரும் வேண்டுகோளினைத் தெரிவிக்கின்றோம்.

இச் சங்கத்தின் உறுப்பினர், அன்பர் ஆவோர், இதன் தொடக்க முதலாகவே, கடவுட் கொள்கை, மதக் கொள்கை குலம், குடி, அரசியல், மொழி முதலாயவற்றின் கொள்கைளில் வேறுபட்டவ ராகவே உள்ளார் என்பதும், ஆயினும் தம் தாய் மொழிப் பற்றிலும், அதன் வளர்ச்சியிலும் மிக்க கருத்துடைய ராகிச், சங்க வளர்ச்சியில், தத்தம் வேறுபாடுகளைச் சிறிதும் கருதாது, ஒற்றுமை பூண்டு, மிக்க மகிழ்வுடன் சங்கத்தைப் போற்றி வருகின்றன ரென்பதும், ஆகவே, இச் சங்க நிகழ்ச்சிகளாம் பள்ளிகள், கல்லூரி, உணவுச் சாலை, ஏழை மாணவர் இல்லம் முதலாய எந்த நிகழ்ச்சிகளிலும் எத்தகைய கொள்கை வேறுபாடு கட்கும் ஒரு சிறிதும் இடம் இல்லை என்பதும் உலகம் அறிந்த உண்மைகள் ஆதலை அந்த அன்பர்கட்குக் கூறி, அன்னவர்களைத் தம் தாய் மொழித் தொண்டு தலைசிறந்து நிற்கும் இச் சங்கத்திற்கு நேரே வந்து, காட்சி அளவையாற் கண்டு உவந்து, சங்கப் பேரன்ப ராகி, இதனைப் போற்றி வருமாறு மிக்க உரிமையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

## நன்றி யுரை.

தமிழ்ப் பொழில் நான்காவது மலர் தோன்றியது முதல் நம் சங்கத்திற்குப் பெரும் பொருள் உதவிய அன்பர்களை மிக மகிழ்ச்சியுடன் குறிக்கின்றோம். இவ் வன்பர்க ளெல்லாருக்கும் சங்கத்தின் நன்றி உரித்தாகும்.

| | | ரூ. |
|---|---|---|
| க. | திரு. S. R. இராமாமிர்த உடையார் அவர்கள்<br>நிலக்கிழவர், கொரடாச்சேரி, | 50<br>(பகுதி) |
| உ. | ,, K. தண்டபாணிச் செட்டியார் ,,<br>மேரி நெல்லரை பொறி, கொரடாச்சேரி | 50<br>(பகுதி) |
| ங. | ,, J. M. அப்துல் அசீஸ் சாகிபு ,,<br>கூத்தாநல்லூர் | 100 |
| ச. | ,, சி. கூ. சுப்பையா பிள்ளை ,,<br>உப்பு வணிகர், வேதாரணியம் | 100 |
| ரு. | ,, A. J. அனந்தராசைய முதலியார் ,,<br>புகையிலை வணிகர், வேதாரணியம் | 25 |
| சூ. | ,, A. V. இராமையா பிள்ளை ,,<br>வணிகர், வேதாரணியம் | 25 |
| எ. | ,, A. K. R. முத்துக்குமரசாமி பிள்ளை ,,<br>வணிகர், வேதாரணியம் | 25 |

| | | | ரூ. |
|---|---|---|---|
| அ. | திரு. ந. பஞ்சநதம் பிள்ளை (மன்னார்குடி) வரிதண்டற் கண்காணிப்பாளர், வேதாரணியம் | அவர்கள் | 10 |
| க. | ,, நெ. சா. அருணுசல முதலியார் நிலக்கிழவர், நெடும்பலம் | ,, | 100 |
| ய. | ,, மா. தருமலிங்கத் தேவர் நிலக்கிழவர், பேட்டை, முத்துப்பேட்டை அஞ்சல் | ,, | 350 |
| யக. | ,, K. பொன்னுத்துரைப் பிள்ளை நிலக்கிழவர், இடையூர் | ,, | 100 |
| யஉ. | ,, T. S. இராமச்சந்திர நாயடு நிலக்கிழவர், தென்பாதி, நுணுக்காடு வட்டம் | ,, | 25 (பகுதி) |
| யந. | ,, K. S. நாயடு, பி. ஏ., பி. எல்., வழக்குரைஞர், நாகப்பட்டினம் | ,, | 100 |
| யச. | ,, கு. க. குப்பாத் தேவர் நிலக்கிழவர், தகட்டூர் | ,, | 100 |

# உள நூல்

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

(முற்றொடர்ச்சி: துணர் 24, மலர் 3, பக்கம் 84.)

## மன அழுக்கு.

மன அழுக்கு என்பது ஒருவரின் செல்வம், பெருமை, செல்வாக்கு ஆகிய இவற்றைக் குறித்துத் தனக்கு இவை இல்லையே என்ற பொறாமையே யாம். பொறாமையால் மனந் தவறான வழியில் செல்லுதலால் அழுக்காறு என்றும், மனங் குற்றம் எய்துதலால் மன அழுக் கென்றும் பெயர் களை யடைகின்றது.

இவ் வழுக்கா றுடையான் தன் முற்போக்கையும், முயற்சியையும் வீணாக்கி வாழ்நாளைக் கெடுத்தலொடு, தன் சுற்றம்கூட உண்பதும் உடுப்பதும் இன்றிக் கெடும் என்னுங் கருத்தைக், 'கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம், உண்பதூஉ மின்றிக் கெடும்' என்ற குறளில் ஓர்ந்து உய்த்துணர வைத்துள்ளார். ஒருவன் தன் முயற்சியால் தன் குடும்பத்தாரைக் காக்க வல்லனா யிருப்பதோடு, உலகியலில் பிறரும் உவகையுடன் எதிர் கொண்டு அழைக்கும் ஏற்றத்துடன் இயைந்து வாழ வேண்டிய இயல்பும் இணைந்திருக்க வேண்டியது இன்றி யமையாத தொன்றாகும். இதனைப் பெற பொறுமை, விடாமுயற்சி ஆகியவை வேண்டற் பாலன. இவற்றை வளர்க்க வேண்டிய இடத்து எச்சரிக்கையாக உலகின்கண் அவரவரின் இயல்புக் கேற்றவாறு வரிசை யறிந்து முகமன்

கூறி உளத்தி னினிமையாகப் பழகல் வேண்டும். இவை யாவும் முன்னேற்ற மடைய அடிப்படையாகக் கொள் ளும் அருங் குணங்க ளாம்.

இவ் வருங் குணங்கள் அழுக்கா றுடையார்க்கு மாறு பாடாகத் தோன்றும். அஃதொடு, பொருமை யுடை யார்க்கு முகமன் கூறுவ தேன் என்றும், தக்க ஊதியம் ஏன் என்றும், ஏவலாள் ஏன் என்றும் கூறிச் சோம்பித் திரிவர்.

இவ் வழுக்கா றுடையான் ஒரு நாளும் முன்னேற்றம் அடைவ தில்லை என்பதனை வள்ளுவர் ஓ ரதிகாரம் வகுத் துத் தெரிவித்ததே யன்றி,

> 'அழுக்கா றுடையான்கண் ணாக்கம்போன் றில்லை
> ஒழுக்க மிலான்க ணுயர்வு'

என்று ஒழுக்க முடைமை என்ற அதிகாரத்தில் உவமை மூலமாக வலியுறுத்திக் கூறியுள்ளார்

பிறர் செல்வத்தைக் கண்டு பொருமைப் படாதே. பிறர் கற்றுள்ள கல்வியைப் பார்த்துப் பொருமைப்படு என்று கூறியுள்ளாரே யெனின், அவ்விடத்தும் கல்வியைப் பார்த்துப் பொருமை யடைவதுடன் இருக்கச் சொல்ல வில்லை. பொருமை காரணமாகக் கல்வியில் ஊக்கஞ் செலுத்து என்பதே கருத் தாகும்.

குமரகுருபரர், 'தம்மின் மெலியாரை' என்று தொடங்கும் செய்யுளில், 'கற்றுரை நோக்கிக் கருத்தழிக' என்ற பகுதி உயர் நோக்க மாகும் என்பதை யாரும் மறுக்கார். பெருமையின் காரணமாகப் பொருமையும், அதனால் ஊக்கமும், ஊக்கத்தினால் கல்வியும், கல்வியினால் பெருமையும் முறையே எய்தல் வேண்டு மென்பதே சகலக லாவல்லி மாலை பாடிய பன்மொழிப் புலவ ரான குமரகுரு பரரின் உட்கருத்தாய் உயர்வைத் தருமே யன்றி, அழுக்கா

றென்னும் அள்ளலிற் பட்டு அல்ல லுற அவர் உள்ளம் உன்னுமோ! உன்னிப் பாருங்கள்!

இன்னும், அழுக்கா றுடையான் தனது முன்னோர் தேடிய தாயப்பொருள் மிகுதியும் பெற்றிருக்கின்றான். இனி, அதிக முன்னேற்றம் அடைய வேண்டு மென்னும் கொள்கையில்லை. ஆதலால், அழுக்காறு என்னும் தீக்குணம் தீமை என்ன உண்டு பண்ண இயலும் என்று ஆராயின், அப்போதும் பாவச் செயல்கள் அனைத்திற்கும் வித்தாய்ச் செல்வ மனைத்தையும் போக்கி, மறுமையில் நரகத் துன்பத் தையும் விளைவிக்கும். ‘அழுக்காறு என ஒரு பாவி திருச் செற்றுத், தீயுழி உய்த்து விடும்’ எனத் துணிவுப் பொருள் படத் தூய மறையால் துலக்கியுள்ளார்.

ஆகையால், அழுக்காறு என்னும் மன அழுக்கினை இளமை முதற் கொண்டே அணுக வொட்டாமல் பார்த் துக் கொள்வதே யன்றி, அழுக்கா றென்னும் தீய குற்றத் திற்கு எதிராக முயற்சி செய்து நலம் பல பெறுதலே ஏற்ற வழி என்பதும் கருத்திற் கொள்க.

இது வரையிற் குறித்தவற்றால், அழுக்காறு என்ற சொல்லின் பெயர்களும் பொருளும், அழுக்கா றுடை யாரின் தீமையும், முன்னேற்றத்திற்கு அடிப்படை யான அருங் குணங்களும் கல்வியிலேயும் பொறாமை கொள்ளாது, பொறாமை காரணமாக ஊக்கமும், ஊக்கங் காரணமாகக் கல்வியும், கல்வியின் பயனாய்ப் பெருமையும் அடைய வேண்டுமென்பதே கருத்து என்பதும், அழுக்காறு இரு மையும் கெடுக்கும் இயல்பிற்று என்பதும், அழுக்காற் றைப் போக்க வழி தேடுதலே சாலச் சிறந்தது என்பதும் கூறிய பொருள்களாம்.

# தமிழ் வளர்ச்சிக் கூறுகளில் ஒன்று.

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

சொல்லிக் கொடுக்கும் முறையோடு, சரித்திரம், பூமி நூல், உள்நூல், உடற்பயிற்சி, ஓவியம் முதலியவற்றைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் மூலம் பயிற்சி யளிக்கப் பெற்ற பயிற்சி யுடையார் ஓராண்டு காலம் குறைந்தது 500 ரூபா செலவு செய்து பெற்ற தகுதிக்குத் தனிச் சிறப்பு இருக்க வேண்டாமா? பதினைந்து ஆண்டுகள் தொழிலில் அமர்ந்திருப்பதைவிட இத் தகுதி மேன்மை யுற்றதல்லவா ?

நியாயத்தைப் பார்த்தால் வித்துவான் தகுதியோடு சொல்லிக் கொடுக்கும் (பண்டிட் டிரெய்னிங் கோர்ஸ்) தகுதியும் பெற்றவர்களுக் கல்லவா மேலான ஊதியமும் சிறப்பும் கிடைக்க வேண்டும்? ஆகையால் ஆசிரியப் பயிற்சி பெற்றுள்ள தமிழாசிரியர்கள் ஒன்று சேர்ந்து ஆவன ஆய்ந்து செய்வதுடன், தமிழ் வளர்ச்சியில் ஊக்க முள்ள செய்தித் தாள்களும், சங்கங்களும் உரிய முறையில் உதவ முன்வர வேண்டு மென்று விரும்புகின்றேன்.

சோழன் கரிகாலனைப் பாடிய

# ஆதனார்.

வித்துவான் திரு. ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்கள்,

அண்ணாமலை நகர்.

சோழன் கரிகாலன், சோழன் கரிகாற் பெருவளத்தான் கரிகால் வளவன் என்றும் கூறப்படுவன். இவனைப் பாடிய சான்றோர்கள் சங்க இலக்கிய முதல் தல புராணங்கள் வரையில் மிகப் பலர் உள்ளனர். கரிகாலன் சங்க இலக்கிய காலத்தவனாதலால், அக் காலத்துச் சான்றோர்களையே இங்கே வரைந்து கொள்வோம்.

சங்க இலக்கியங்களிற் காணப்படும் சான்றோர்களில் சோழன் கரிகாலனைப் பாடியவர் எண்மராவர். அவர்கள் முடத்தாமக் கண்ணியார், கடியலூர் உருத்திரங்கண்ணனார் வெண்ணிக் குயத்தியார், கழாத் தலையார், நக்கீரர், மாமூலனார், பரணர், கருங்குழலாதனார் என்போராவர்.

ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார் சோழன் கரிகாற் பெருவளத்தானைப் பொருநராற்றுப்படை பாடிச் சிறப்பித்துள்ளார். பொருநன் ஒருவன் சோழன் கரிகாலனிடம் சென்று, அவன் தந்த பெருஞ் செல்வத்தைப் பெற்று வருபவன், வேறொரு பொருநன் தன் எதிர் வரக் காண்கின்றான்; அவன் வறுமை மிகுந்து வாடியிருக்கின்றான்; அவனுக்குத் தான் கரிகாலனைக் கண்ட திறமும், கரிகாலன் பிறப்பு வரலாறும், கொடை நலமும், பிறவும் எடுத்தோதி, அவனையும் கரிகாலனிடம் சென்று வேண்டுவன பெற்று வறுமைப் பிணி நீங்குமாறு ஆற்றுப்படுத்துகின்றான்.

இதன்கண் கரிகாலன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மகன் என்றும், இவன் பிறக்கும்போதே தந்தை இறந்ததனால் அரசுரிமையுடன் பிறந்தான் என்றும், இளமையிலே அரசு கட்டிலேறினா னென்றும் ஆசிரியர் கூறுகின்றார்.

இதனை. ' ... ... ... வென்வேல்
உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்,
முருகற் சீற்றத்து உருகெழு குருசில்
தாய்வயிற் றிருந்து தாயம் எய்தி
எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்பச்
செய்யார் தேஎம் தெருமரல் கலிப்ப '

ஆட்சி செய்ய லுற்ருன் என்றும், நாடாளுதற் குரிய நலம் பலவும் கரிகாலனுக்குக் கருவிலேயே திருவாய் வாய்த்திருந்தன; அதனுல் காலை ஞாயிறுபோல் உலகு புகழும் காட்சி யுடைய ஞனை் என் பது தோன்ற,

' பவ்வ மீமிசைப் பகற்கதிர் பரப்பி
வெவ்வெஞ் செல்வன் விசும்பு படர்ந்தாங்குப்
பிறந்துதவழ் கற்றதற் ஞெட்டுச் சிறந்தநன்
ஞடு செகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப '

விளங்கிஞ னென்றும் வருவனவற்ருற் காணலாம்.

மேலும், கரிகாலன் அரசுகட்டி லேறிய சின்ஞட்கெல்லாம் சேர பாண்டியர் இருவரும் துணைவர் பலருடன் கூடிக்கொண்டு, கரிகாலனை வீழ்த்தக் கருதிச், சோழ நாட்டு வெண்ணி யென்னு மிடத்தே போருடற்றினர். அப் போரில் மிக்க இளையஞ யிருந்த கரிகாலன், துணை வந்தோர் படை துறந் தோட, பாண்டியன் பரு வந்து பின்னிட, சேரன் மார்பில் தைத்த வேல் முதுகு புண் செய்ய, நாணி வாள்வடக்கிருந்து உயிர் துறக்கப், பெருவென்றி யெய்திஞன். இது,

' ஆளி நன்மான் அணங்குடைக் குருளை
மீளிமொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டம் களிறட் டாஅங்கு
இரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்ருள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்'.

என வருவது காண்க.

இனி, கரிகால் வளவனுடைய ஆட்சி நலத்தை முடத்தாமக் கண்ணியார் மிகச் சுருங்கிய சொற்களாற் காட்டுகின்றார்.

‘ மண்மருங்கினுன் மறுவின்றி
ஒருகுடையான் ஒன்று கூறப்
பெரிதாண்ட பெருங்கேண்மை
அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்
அன்னோன் வாழி வென்வேற் குருசில் ’

என்பது கரிகாலன் ஆட்சி நலம் காட்டும் குறிப் பாகும்.

கரிகாலன் தன்னைப் பாடிப் பாராட்டும் பரிசில ராகிய பாணர், கூத்தர், பொருநர், புலவர் முதலியோர்க்கு வேண்டும் பொன்னும், பொருளும், தேரும், களிறும், ஊரும், நாடும், நல்கி யூக்கிறான். இதனைப் பெருவளம் பெற்றுவரும் பொருநன் கூற்றில் வைத்து,

‘ எரியகைந்த வேடில் தாமரை
சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி
நூலின் வலவா நுணங்கரில் மாலை
வாலொளி முத்தமொடு பாடினி யணியக்
கோட்டிற் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்
ஊட்டுளை துயல்வர வோரி நுடங்கப்
பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்
காலின் ஏழடிப் பின்சென்று கோலின்
தாறுகளைந் தேறென் றேற்றி வீறுபெறு
பேர்யாழ் முறையுளிக் கழிப்பி நீர்வாய்த்
தண்பணை தழீஇய தளரா விருக்கை
நன்பல் லூர நாட்டொடு நன்பல்
வெரூஉப்பறை நுவலும் பரூஉப்பெருந் தடக்கை
வெருவரு செலவின் வெகுளி வேழம்
தரவிடைத் தங்கலோ விலனே

என்று விரியக் கூறியுள்ளார்.

முடிவில் கரிகாலனுடைய காவிரி நாட்டு விளை நலம் கூறி முடிக்கும் முடத்தாமக் கண்ணியார்.

‘ கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து
சூடு கோடாகப் பிறக்கி நாடொறும்

குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும் நாடுகிழ வோனே'

என்று இயம்புகின்றார்.

இவ் வண்ணம் பொருந ராற்றுப்படையால் கரிகால் வளவனைச் சிறப்பிக்கும் முடத்தாமக் கண்ணியார் பெண்பாலரென்று கருதுவோரும் உண்டு, வெறி பாடிய காமக்கண்ணியார் போல, வளைந்து கிடக்கும் தாமத்தை முடத்தாமம் என்று பாடிய நலங் கண்டு சான்றோரால் முடத்தாமக் கண்ணியார் என வழங்கினர் போலும் என்றும் கூறுவர். 'இவர் பெயர் உறுப்பால் வந்த தென்றும், இவர் பெண்பாலா ரென்றும் கூறுவாரும் உளர்' என்பர், திரு. உ. வே. சாமிநாதையர்.

இனி, ஆசிரியர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் கரிகாலனைப் பட்டினப்பாலை யென்னும் பாட்டைப் பாடிச் சிறப்பித்தவர். இதன்கண், கரிகாலனுடைய மறம் வீங்கு பல் புகழும், அவனுடைய காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பும் விரித்துப் பாராட்டிக் கூறப்படுகின்றன. கரிகாலனை ஒருகால் அவன் பகைவர் ஒரு சூழ்ச்சியாற் கைப்பற்றிச் சிறை செய்து திண்ணிய காப்பும் காவலும் அமைத்திருந்தனர். ஆயினும், அவன், அவர் செய்த சூழ்ச்சியினும் மிக நுண்ணிய சூழ்ச்சி செய்து சிறைக் கோட்டத்தினின்றும் தப்பிச் சென்று, தன்னகரை யடைந்து, அரசுரிமை யெய்தினன் என்பது வரலாறு. இதனை உருத்திரங் கண்ணனார்,

' ... ... ... ... கூருகிர்க்
கொடுவரிக் குருளைக் கூட்டுள் வளர்ந்தாங்குப், பிறர்,
பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி,
அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்து

உருகெழு தாயம் ஊழின் எய்திப்
பெற்றவை மகிழ்தல் செய்யான்'

என்று குறித்துள்ளார். பின்னர், அவன் தன்னை இவ் வண்ணம் சூழ்ச்சியாற் சிறை செய்த பகைவர் மேற் சென்று, அவருடைய

'உகிருடை யடிய வோங்கெழில் யானை
வடிமணிப் புரவியொடு வயவர் வீழப்
பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்பத்
தூறிவர் துறுகற் போலப் போர்வேட்டு
வேறுபல் பூளையோ டுழிஞை சூடிப்
பேய்க்கண் ணன்ன பிளிறுகடி முரசம்
மாக்கண் அகலறை யதிர்வன முழங்க
முனைகெடச் சென்று முன்சம முருக்கி'

அவருடைய வூர்களைப் பெரும் பாழ் செய்தும் அமையானாய்,

'மலையகழ்க் குவனே கடல்தூர்க் குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற்றுவ னெனப்'

பெருமறஞ் செருக்கி மேம்பட்டான். அது கண்ட ஒளியர் பணிந் தொடுங்கினர்; அருவாளர் தொழில் புரிந்தொழுகும் தொழும்ப ராயினர்; வடவர் வாடினர்; குடவர் கூம்பினர்; தென்னவர் திற லழிந்தனர்.

இந் நிலையில் சோழ நாட்டின் இடையிலும் எல்லையிலும் வாழ்ந்த பொதுவரும் இருங்கோவேளிரும் குறும்பு செய்தொழு கினராக, அவர்களை யடக்கி, அவர்கள் இருந்துகொண்டு குறும்பு செய்த காடுகளை அழித்து நாடாக்கி, அந் நாடுகள் வளம் பெறக் குளந் தொட்டு, பகைவர்களால் உறையூர்க் குண்டான கேடு களைப் போக்கித் திருத்திப், பண்டுபோல் கோயிலும் அரணும் ஏற்படுத்திப், பகைவர்க் கஞ்சிச் சென்ற பழங்குடிப் பெருமக் களைக் குடிநிறுத்திப் போர் நேரில் 'பொருவே மல்லது, ஒருவேம்' என்ற சிறப்புரை கிளந்து திகழ்ந்தான், கரிகால ஞகிய செங் கோல் வளவன் என்று இனிது மகிழ்ந்து பாடுவாராய், நம் கண்ணனர்

'புன்பொதுவர் வழிபொன்ற
இருங்கோவேள் மருங்குசாயக்

காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கிப்
பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇப்
பொருவேமெனப் பெயர் கொடுத்து
ஒருவேமெனப் புறக்கொடாது
திருநிலைஇய பெருமன்னெயில்
மின்னொளி யெறிப்ப'

வீறு பெற்று விளங்கினன் என்று பாடுகின்றார்.

இனி, கரிகாலனுடைய காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பைக் கூறுகின்ற கண்ணனார், காவிரி கடலொடு கூடும் கூடலாகிய துறைமுகத்தின்கண்,

'வைகல்தோறு மசைவின்றி
உல்குசெயக் குறைபடாது
வான்முகந்த நீர்மலைப் பொழியும்,
மலைப்பொழிந்த நீர்கடற் பரப்பவும்
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி'

வேந்தனுடைய புலிப்பொறி பொறிக்கப்பட்டு மலைபோலக் குவிந்து கிடக்கும் என்கின்றார். நகர்க்குள் நுழைவோமாயின், அங்கே,

'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியுங் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி'

காணுங் கண்ணுக்கு இனிய காட்சி வழங்குகின்றன என்பர்.

அன்றியும், இந் நகர்க்கண்,

‘வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கல்
சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்’

காட்சி மலிந்திருக்கிற தென்பர்.

இங்ஙனம் கரிகாலன் மாண்பும், அவனுடைய காவிரிப்பூம் பட்டினத்துச் சிறப்பும் கவினுற எடுத்தோதும் கடியலூர் உருத்திரங்கண்ணனார்க்குக் கரிகாலன் பதினாறு நூறாயிரம் பொன் பரிசில் நல்கினான் எனக் கலிங்கத்துப் பரணி கூறுகிறது. கல்வெட்டொன்றும் அதனை வற்புறுத்துகிறது. கடியலூ ரென்பது இவர தூர். உருத்திரன் என்பது இவர் தந்தை பெயர். கண்ணன் என்பது இவரது இயற் பெயர்.

இனி, சேரமான் பெருஞ்சேரலாதனும் பாண்டி வேந்தன் ஒருவனும் வேளிர் பதினொருவரோடு கூடிப், பெரும் படையொடு வந்து, வெண்ணியிடத்தே, பொருது கரிகாலனுக்கு ஆற்றாராய்க் கெட்டபோது, சேரமான் பெருஞ்சேரலாதன் பொருது, புண் பட்டு, மானம்பொருது, அவ் வெண்ணியிடத்தே வாள் வடக்கிருந்து உயிர் துறந்தபோது, அந் நிகழ்ச்சியை நேரிற் கண்ட சான்றோர் வெண்ணிக் குயத்தியா ராவர். அக்காலத்தே கடலில் அடிக்கும் காற்றைப் பயன்கொண்டு கலஞ் செலுத்தும் விரகினை முதற்கண் கண்டவர் சோழர் என்றும், அச் சோழர் வழிவந்தவன் கரிகாலன் என்றும் புக முண்டாகியிருந்தது. கரிகாலனொடு பொருது தோற்ற முடிவேந்தர் இருவருள் பாண்டியன், வெற்றியும் தோல்வியும் ஒருவர்க்கே யுரியவல்ல; வென்றி யெய்தினோர் தோற்றலும், தோற்றோர் வெற்றி யெய்துதலும் மாறி வருவது இயல் பென்று தெளிந்து, தன் னாட்டிற்குச் சென்றது போலாது, மார்பிற் புறைத் துருவி முதுகிற் புண்ணுண்டானதற்கு நாணிச் சேரலாதன் தான் தோல்வி பெற்ற போர்க்களத்தின்கண்ணே வாள்வடக்கிருந்து உயிர் துறந்ததும், அது கேட்ட அவனுடைய தானைச் சான்றோர் சிலர் உயிர் துறந்ததும் சிறந்த மற நெறியாகத் தோன்றுமை கண்டார். மறத்தின் நீங்கா மானமாவது தன்னை வென்றோனைக் காலங் கருதியிருந்து,

வாய்த்தவுடன் அவனை வென்று விளங்குதலாகும்; இதனை யுணராது வடக்கிருந்த சேரலாதன் கரிகாலனைவிடச் சிறந்தவனுதல் இல்லையென அவன் உள்ளந் தெளியுமாறு வற்புறுத்தினர். அதனை,

'நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட வுரவோன் மருக!
களியியல் யானைக் கரிகால் வளவ!
சென்றமர்க் கடந்த நின்னாற்றல் தோன்ற
வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புக ழுலக மெய்திப்
புறப்புண் ணணி வடக்கிருந் தோனே'

என்று பாடியிருத்தல் காண்க.

வெண்ணிக் குயத்தியாருடைய இயற்பெயர் தெரிந்திலது. வெண்ணி யென்பது தஞ்சை மாநாட்டில் (ஜில்லாவில்) உள்ள தோர் ஊர்; இவ் வூரிற்றான் கரிகாலனது வெண்ணிப் போர் நிகழ்ந்தது; இங்கேதான் பெருஞ் சேரலாதன் வாள் வடக்கிருந்தது. பண்டை நாளில் கலஞ் செய்யும் வேட்கோவருட் சிறந்தார்க்குக் குயம் என்னும் சிறப்பினை வேந்தர் நல்கி விளக்கமுறுவித்தனர். அத்தகைய சிறப்புடையவர் இவர் என்பது விளங்கக் குயத்தியார் எனப்படுவா ராயினர். இச் சிறப்புப் பெயரால் இவரது இயற் பெயர் மறைந்து போயிற்று.

இனி, கழாத்தலையார் என்னும் சான்றோர் சேரமான் பெருஞ்சேரலாதன் வாள்வடக்கிருந்து உயிர் துறந்த தறிந்து பெருவருத்தத்தால் கையற்றுத் தன்னை யொத்த வேந்தன் தன் மார்பு குறித்து எறிந்த வேல் புறத்தே ஊடுருவிப் புண் செய்ததற்கு நாணி மறத்தகை மன்னனான பெருஞ்சேரலாதன் வாள் வடக்கிருந்து உயிர் துறந்தான். இனி, எங்கட்கு நாட்கள் அவன் இருந்த நாளிற்போல இனிது கழியா,' என்று புலம்பியுள்ளார். அதனை,

'மண்முழா மறப்பப் பண்யாழ் மறப்ப
இருங்கண் குழிசி கவிழ்ந்திழுது மறப்பச்

சுரும்பார் தேறல் சுற்றம் மறப்ப
உவவுத் தலைவந்த பெருநா ளமையத்து
இருசுடர் தம்முள் நோக்கி ஒருசுடர்
புன்கண் மாலை மலைமறைந் தாங்குத்
தன்போல் வேந்தன் முன்புகுறித் தெறிந்த
புறப்புண் ணுணி மறத்தகை மன்னன்
வாள்வடக் கிருந்தனன் ஈங்கு
நாள்போற் கழியல ஞாயிற்றுப் பகலே'

என அவர் பாடியிருப்பது காண்க.

கழாத்தலையார் சேர மன்னர்களில் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனையும், பெருஞ்சேரலாதனையும் பாடியிருத்தலி ஞலும், ஏனை வேந்தர்களைப் பாடினு ரெனற்கு வேண்டும் இவர் பாட்டுக்கள் தொகை நூல்களுட் காணப்படாமையாலும், இவர் சேர நாட்டின ரெனக் கருதற்கு இடமுண்டாகிறது. கையெழுத்துப் பிரதியொன்றில் இவர் பெயர் கழார்த்தலை யெனக் காணப்படுகிறது. அதுவே உண்மைப் பாட மாயின், இவர் கழார் என்னும் ஊரினராக எண்ணலாம். அக் கழாரும் சேரநாட்டு ஊராதலும் கூடும்.

நக்கீரனுர், பரணர், மாமூலனுர் ஆகிய மூவரும் சோழன் கரிகாலனை நேர்முகமாக வைத்துப் பாடினு ரில்லை. ஆயினும், அவர்கள் தாந் தாம் அவ்வப்போது பாடிய பாட்டுக்களில் ஒவ் வோ ரிடத்தில் கரிகாலனைக் குறித்துப் பாடியிருக்கின்றனர். தலைவன் தனக் குரிய வினை குறித்துப் பிரிந்து சென்ருனுக, தலைவி அவன் பிரிவாற்ருது உடல் மெலிந்து வருந்துவளோ என அவள் தோழி நினைந்து கவலையுற்ருள்; அதுகண்ட தலைவி, தோழி! 'செல்வம் கொணரச் சென்றுள்ள நம் காதலர் வினைகுறித்துப் பிரிவதற்கு யான் வருந்தவில்லை; கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் மறுகு விளக்குறுத்து மாலை நாற்றிச் செய்யும் விழாவுக்கு வந்துவிடுவா'ராயின் நன்று. என்று கூறுகின்ருள். அவள் கூற்றைப் பாடிக்காட்டும் நக்கீரர் கரிகாலனைச் சிறப்பித்து, 'செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால், வெல்போர்ச் சோழன் இடையாற் றன்ன, நல்லிசை வெறுக்கை தருமார்' (அகம் 141) என்று பாடியுள்ளார்.

தலைவன் பரத்தையொடு கூடிப் புனலாடி வந்தானாக, அவனுக்குத் தோழி வாயில்மறுப்பவள், 'நீ பரத்தையொடு புனலாடினையென்று சொல்லுகின்றனர்; அதனை நீ மறைத்தாலும் ஊரில் உண்டாகிய, அலர் பெரிது.' என்கின்றாள். அவள் கூற்றைப் பாடிக்காட்டும் பரணர், கரிகாலன் வெண்ணிப் பறந்தலையில் சேர பாண்டியர் இருவரும் வேளிர் பதினொருவரும் தொலைந்து கெட வென்றதனால், அவனுடைய அழுந்தூரார் வெற்றி விழாக் கொண்டாடி யெடுத்த ஆரவாரத்தினும் பெரிது அந்த அலர் (அகம் 246) என்று பாடியுள்ளார் மேலும், பரணர் கரிகாலனுடைய வெண்ணிப் போர் வென்றியோடு, வாகைப் பறந்தலை யென்னு மிடத்தேயும் கரிகாலன் ஒன்பது வேந்தரை வென்று மேம்பட்டான் என்பாராய்,

'விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வெருவரு தானையொடு வேண்டுபுலத் திறுத்த
பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை யாடுபெற
ஒன்பது குடையும் நன்பக' லொழித்த
பீடில் மன்னர் (அகம். 125)

என்று குறித்துள்ளார். ஆகவே, கரிகாலன் வெண்ணிப் பறந்தலையில் ஒரு பெரும் போரும் வாகைப் பறந்தலையில் ஒரு பெரும் போரும் செய்து வெற்றிபெற்றுள்ளான் என்பது பெறப்படும். இதன் கண், 'வெருவரு தானையொடு வேண்டுபுலத் திறுத்த, பெருவளக் கரிகால்' என்றதனால், இந்த வாகைப் பறந்தலை சோழ நாட்டதன்று என்பது விளங்கும். இது பாண்டி வேந்தனுடன் செய்த போராதல் வேண்டியிருத்தலின், வாகைப் பறந்தலை பாண்டி நாட்டின் கண்ணதாம்.

பாண்டி நாட்டில் வாகைக் குளம் என்றோர் ஊர் திருநெல்வேலி மாவட்டத்தில் உளது. வாகைக் குளமே வாகைப் பறந்தலையாயின், கரிகாலன் தென்பாண்டி நாட்டின் கிழக்கி லுள்ள வாகைப் பறந்தலையில் பாண்டியனையும் அவற்குத் துணைவந்த குறுநிலமன்னர் எண்மரையும் நண்பகற்போதில் தம் குடை யொழித்தோடுமாறு செய்தான் என்பது துணிபாம். பின்பு அங்கிருந்து மேற்கு நோக்கித் தாமிரபரணிக் கரை வழியே கரிகாலன் சென்

றிருத்தல் வேண்டும். மாமூலனார் கரிகாலன் வெண்ணிப்போரில் எறிந்த வேல் சேரலாதன் மார்பிற் பட்டு உருவி முதுகிற் புண் செய்ததற்கு நாணி வடக்கிருந் துயிர் துறந்த போது, சான்றோர் பலர் மேலுலகிற்கு அவனொடு செல்ல விரும்பித் தாமும் உயிர் விட்டனர் என்கின்றார். இதனை,

" ... ... ... ஒண்படைக்
கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண் ணாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென
இன்னா வின்னுரை கேட்ட சான்றோர்
அரும்பெற லுலகத் தவனொடு செலீஇயர்
பெரும்பிறி தாகி யாங்கு' (அகம். 55)

என்பது காண்க, இதனால் சேரலாதன் வெண்ணியிலேயே வடக்கிருந்தா னென்பது 'அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென" என்பது கொண்டு தெளியப் படுகிறது. படவே, வெண்ணிக் குயத்தியார் சேரலாதன் வடக்கிருப்பது கண்டு பாடியது நன்கு வலியுறுகிறது.

இனி, இறுதியாகக் காணப்படுபவர் கருங்குழலாதனார் என்பவ ராவர். இவர் கரிகாலன் பாண்டியனையும் சேரலாதனையும் குறுநிலத் தலைவ ரான வேளிர் பலரையும் வென்று சிறந்து விளங்குவதைப் பாராட்டிப் பாடியுள்ளார். ஆதனார் ஆதன் என்பன தமிழகத்தில் அனைவருக்கும் பொதுவாகப் பயில விளங்கும் பெயராயினும், சேர வேந்தர் பலர் சிறப்பாக அவற்றை மேற்கொண்டிருத்தலால், இவர் சேரர் குடியில் தொடர்பு உடையரெனக் கருதுதற்கும் இடமுண்டு.

கரிகாலன் வாகைப் பறந்தலையில் பாண்டியனையும் வேளிரையும் வென்று தென் பாண்டி நாட்டுள் மேற்றிசை நோக்கிச் செல்லலுற்றானாக, அங்கே அவனை எதிர்த்த பகைவர் ஊர்களெல்லாம் தீக்கிரை யாயின. சென்ற விடமெல்லாம் 'அழுவிளிக்கம்பலை' (அழுகுரல்) மிகுவ தாயிற்று. நாட்டில் நற்பொருள் விளைதற்கும் இருத்தற்கும் இடமில்லையாமாறு அழிவு வினை நடைபெற்றது. இவற்றைக்கண்ட ஆதனார் கரிகாலனையடைந்து அழிவு நிகழாவிடத்து இருக்கும் நாட்டு நிலையையும்,

நிகழ்வதனுல் உண்டாகிய கேட்டையும் அவற்கு உரைத்து, அவன் உள்ளத்தில் அருள் நிலவச் செய்யவேண்டுமெனக் கருதினர். சோழன் கரிகாலன் புலவர்களை வரவேற்று, அவர் புலமை நலத்தை யோர்ந்து வேண்டும் பரிசி னல்கும் பான்மை யுடையவன். அதனுல் அவர் அவனை எளிதிற் காணமுடிந்தது. சோழனைக் கண்டு, 'வளவ, களிறு ஊர்ந்து அவற்றைச் செலுத்துதற்கு ஏற்ப இயன்ற முழந் தாளும், கழ லணிந்து உரிஞப்பட்ட அழகிய திருவடியும், அம்பு தொடுக்கும் திறனும், இரவலர்க்கு அள்ளி வழங்கும் வளவிய கையும், கண்ணுற் காண்பார்க்கு விளங்கத் தோன்றும் வில்லும், திருமகள் தனக்கே யுரிமை பூண்டு விளங்கும் மார்பும், பெருங் களிற்றையும் பொருது பெயர்க்கும் பெருவன்மையும் கொண்டு விளங்குகின்ருய் நின் உள்ளத்தே சினத்தை யெழுப்பிப் போரில் ஈடுபடச் செய்யும் பகை வேந்தருடைய நாடு நல்ல நீர் வளம் பொருந்தியது. தண் புனல் பரந்து வந்து வயலிடத்து மடையை உடைக்குமாயின், அந்த உடைப்பை மண்பெய்து அடைத்தால் அடைபடாமை காணும் உழவர் நீரில் மேயும் மீன்களைப் பிடித்து உடைப்பி லிட்டு மண்ணிட்டு அடைப்பர். இத்துணைப் பெரும் பயன் விளைக்கும் நாடு, இர வென்றும் பக லென்றும் எண்ணுமல் ஊர்களைத் தீக் கிரையாக்கி ஊரவர் வாய்விட்டரற்றி யெழுப்பும் அழுவிளிக்கம்பலை மிக்கெழச் சூறையாடுதலை விரும்புகின்ருய்'' என்ற கருத்தமைய,

'களிறுகடைஇயதாள்
கழலுரீஇய திருந்தடிக்
கணைபொருது கவிவண்கையால்
கண்ணொளிர் வரூஉங் கவின் சாபத்து
மாமறுத்த மலர்மார்பின்
தோல்பெயரிய எறுழ்முன்பின்
எல்லையும் இரவும் எண்ணுய், பகைவர்
ஊர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை யாகலின் நல்ல
இல்ல ஆகுபவால் இயல்தேர் வளவ!
தண்புனல் பரந்த பூசல்மண் மறுத்து
மீனிற் செறுக்கும் யாணர்ப்
பயன்திகழ் வைப்பிற் பிறர்அகன் றலைநாடே'

என்ற பாட்டைப் பாடினர். கரிகாலன் அவர்க்கு முற்றாட்

டாகச் சில ஊர்களும் பொருளும் நல்கினன் என உணர வேண்டியவர்களாக நாம் உள்ளோம். ஏனெனில், கரிகாலன் தன்னைப் பாடி வரும் புலவர், பாணர் பொருநர், முதலியோர்க்கு நல்ல பல வூர்களையும் அவ் வூர்களையுடைய நாடுகளையும் தருப வன் என்பதை முடத்தாமக்கண்ணியார் கூறியிருப்பது காண்க.

பின்னர், சோழன் கரிகாலன் பாண்டி நாட்டினின்றும் நீங்கித், தன் சோழ நாட்டிற்குச் சென்று சில ஆண்டுகள் கழிந்த பின் விண்ணுலகம் சென்ருன். இதற்கிடையே ஆதனுர்க்கும் கரிகால் வளவனுக்கும் நட்பு மிகுந்தது. அவன் இறந்த செய்தி கேட்ட ஆதனுர் சோழநாடு சென்ருர். கரிகாலன் இல்லை. அவன் மகளிரும் தம் இழை முற்றும் களைந்து கூந்தல் களைந்த தலையராய் இருந்தனர். அக் காட்சி ஆதனுர்க்கு மிக்க வருத்தத்தைச் செய்தது. அக்காலை அவர் பகைவேந்தர் மதில்களைப் பொருளா எண்ணது எளிதிற் கடந்து வெல்வதும், பாணர் முதலிய இரவலர்க்கு வேண்டுவ நல்கி ஆதரவு செய்வதும், தன் மகளிரொடு கூடி வேள்வி யந்தணர்களைக் கொண்டு வேள்வி பல செய்வதும், ஆகிய இவற்ருல் விளையும் பயனை நன் கறிந்த அறிவுடையோன் சோழன் கரிகாலன்.

‘ அறிந்தோன் மன்றஅறிவுடை யாளன்
இறந்தோன் தானேஅளித்திவ் வுலகம்,
அருவி மாறியஞ் சுவரக் கடுகி
பெருவறங் கூர்ந்த வேனிற் காலைப்
பசித்த வாயத்துப் பயனிரை தருமார்
பூவாட் கோவலர் பூவுட னுதிரக்
கொய்து கட்டழித்த வேங்கையின்
மெல்லியல் மகளிரும் இழைகளைந்தனரே ’ (புறம். 224)

என்று பாடி வருந்தினர்.

இவ் வண்ணம் சோழன் கரிகாலன் இறந்த பின்பு அவன் பிரிவாற்ருது கையற்று வருந்திய சான்ருேர் வேறு யாவரும் காணப்பட வில்லை. ஆதனுர் ஒருவரே காணப்படுகின்ருர். இந்த ஆதனுர் சங்கத் தொகை நூலிற் காணப்படும் சான்ருேருள் ஒருவரான கருங்குழலாதனுர் என முன்பே கண்டோம. இவர் இயற் பெயர்க்குமுன் கருங்குழல் என்ருெரு தொடர்மொழி நின்று சிறப்பிக்கின்றது. அதற்கும் ஆதனுர்க்கும் உள்ள இயைபு ஒன்றும் விளங்கவில்லை.

இருபத்திரண்டு யாண்டுகட்குமுன் பள்ளியூரில் இளம் பூரணர் உரையுடன் புறநானூற்றுக் கையெழுத்துப்படி யொன் றும் என் நண்பர் ஒருவர்பால் இருக்கக்கண்டு அதனையும் புற

நானூற்று அச்சுப் பிரதியையும் ஒப்புநோக்கி வேறுபட்ட பாடங்களை யான் குறித்துக்கொண்டது நண்பர் பலரும் அறிந்தது. அக் குறிப்புகளுள் கருங்குழலாதனார் என்பது கருங்குழவாதனார் என்று இருக்கிறது. எங்கேயோ மூலையில் கிடந்த இக் குறிப்பு ஒரு சில நாட்களுக்கு முன்பே கிடைத்தது. கருங்குழவாதனாரென்பது கருங்குழலாதனார் என்ன எழுதப்படுதற்கியையுண்டு; இதனை யாராய்தல் வேண்டுமெனஎண்ணிமேலும் முயலுமிடத்து, கருங்குளம் என்பதோர் ஊரென்பது தெரிந்தது. தென்பாண்டி நாட்டுத் திருநெல்வேலி மாவட்டத்தில் கோட்டைக் கருங்குளம் என்றோர் ஊர் இருக்கிறது. அதனை அவ்வூர்க்கல்வெட்டுக்கள் 'கருங்குள வளநாட்டுக் கருங்குளம்' என்று கூறுகின்றன. ஆகவே கருங்குளம் என்ற ஊருண்மை தெள்ளிதாயிற்று.

இனிக், கருங்குளத்துக்கும் ஆதனாருக்கும் தொடர்பென்னையென்று காண்டல் வேண்டியதாயிற்று. அவ்வூர்க் கல்வெட்டொன்று அதனைக் 'கருங்குள வளநாட்டுக் கரிகால் சோழ நல்லூரான கருங்குளம்' (A. R. No. 269 of 1927—28) என்று குறிக்கிறது. கரிகால் சோழனுக்கும் ஆதனார்க்கும் தொடர்புண்டென்பது அவர் அவனைப் பாடிய பாட்டுக்களால் தெளிவாகிறது. ஆகவே, கருங்குளத்துக்கும் கரிகாற் சோழனைப் பாடிய ஆதனாருக்கும் தொடர்புஉளதாதல் எளிதாம். ஆகவே, கருங்குளவாதனார் காலத்தே அக்கருங்குளம் அவன் பெயரால் கரிகாற் சோழநல்லூராகப் பெயரிடப்பெற்று ஆதனார்க்கு அவனால் முற்றூட்டாக வழங்கப்பட்டிருக்குமென்பது பொருந்தாதொழியாது. கருங்குளத்துக்கு உரியவராகிய ஆதனார் தென்பாண்டி நாட்டுக் கருங்குளவாதனார் எனப் படுவது இயல்பாம்.

இதனை இறுதியிற் குறிப்பது குறித்தே கரிகாலனது தென்பாண்டி நாட்டு வரவும், ஆங்கு அவனைச் சிறப்பித்துப் பாடிய புலவர்க்கு ஊர் வழங்கியதும் இக் கட்டுரையிடையே வற்புறுத்தப்பட்டன. பாண்டி நாட்டில் கரிகாலனைப் பாடியவர் கருங்குளவாதனார்; அவர்க்கு அவன் அளித்தவூர் கரிகால் சோழ நல்லூரான கருங்குளம். இக் கருங்குளத்திலுள்ள இராசசிம்மேச்சுரத்திற்குத் திருவாங்கூர் மன்னரும் திருப்பணிசெய்துள்ளனரென அவ்வூர்க் கல்வெட்டு (A. R. 287 of 1927—28) கூறுவது பற்றி அவ் வூர்க்குச் சேரர் தொடர்பும் உண்டென உணரலாம். என்பது முடிபாம்.

# இசைத் தமிழ்

திரு. சங்கீதம் ப. சுந்தரேசன்,

தேவாரத், திருப்புகழ் இசையாசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.

## க. தோற்றம்.

**ந**ம் தமிழ் நாட்டில் இசைக் கலை சரித்திர கால வெல்லைக் கெட்டாத காலத்திற்றுனே தோன்றி வளர்ந்து வருகின்றது. முதன் முதலில் இசைக் கலையைப் பழந் தமிழ் நாட்டுப் பஃறுளி யாற்றங் கரையில் வாழ்ந்த கானத் திடையர் எனும் பெருமக்களே கண்டு வளர்த்தன ரெனவும், பின்னர் பாணர் பெருமக்கள் என்பாரானும், சிறப்பாக அக் கலை வளர்க்கப்பட்ட தெனவும், நம் சங்க நூல்க ளியாவும் நன்கு பகர்கின்றன. மிகமிகப் பழைய காலத்தில் இடையர்களால் காணப்பட்ட (ஆக்கப்பட்ட) இசைக் கருவி குழல்தான் பின்னர், அப் பெருமக்க ளாலேயே, குழ லிசைக் கேற்ப **யாழ்க்** கருவிகள் ஆக்கப் பட்டன. அம் முறையில் தோன்றிய யாழ்க் கருவி **வில் யாழ்** ஆகும், அக்கருவி முகிழ மரக் கொம்புகளை நறுக்கி யெடுத்து, அள வறிந்து **மரல்** மர நாரினுல் வில் வடிவாகக் கட்டி, அப்படிப் பத்து விற்கள் ஒன்ருகச் சேர்த்துக் கட்டிய தாகும். இவற்றி னிலக்கணம் பலவும் பெருக **யாழ்நூலிற்** காணலாம். தமிழில் **இசை** என்பதை இக் காலம் **ஸ்வரம்** எனக் கூறுகின்ருேம். பழைய காலத்தில் குழலிலும், வில்யாழிலும் அமைந்த இசை ஐந்தே. வில்யாழில் இவ் வைந் திசை இரு நிரலாகக் கட்டப்பட்டன. ஒரு இசைக்கு ஒரு நரம்பாகக் கட்டுவதே **யாழ்** வழக்கு. ஒரு நரம்பு கட்டி இடையில் தடை மெட்டு வைப்பது பிற்கால **வீணை** வழக்காம். பழங் கால ஐந் திசைத் தொகுதியினு லாய ஐந்து பண்கள் இன்றும் இந் நாட்டில் வழக்கி லுள்ளன. மேலும், இவ் வமைப்பு எல்லா நாடுகட்குமே

பொருத்த மான பழைய வமைப்பே யாகு மென அறிஞர் பலரும் கூறுகின்றனர். பழங் கால ஐந்திசையின் பெயர் கள், க. தாரம், உ. குரல், ந. துத்தம், ச. உழை ரு. இளி என்பன இவற்றை இரு நிரலாகக் கொள்ள, தாரம், குரல், துத்தம், உழை, இளி, தாரம், குரல், துத்தம். உழை, இளி, என் றமையும். இவ் வைந் திசைக ளியாவும் இக்காலம் நமது நாட்டில், தாரம் காந்தார மெனவும், குரல், மத்யமம் எனவும், துத்தம் பஞ்சம மெனவும், உழை நிஷாத மெனவும், இளி ஷட்ஜ மெனவும் பெயரளவில் மட்டுமே திரிபுற்று வழங்கிவருகின்றன. இவற்றின் பண்கள் அக் காலங்களில் தார முதலாக இளி வரை இசைக்க இராம கிருதியாம். இஃது இக்காலம் மோகன ராக மாகும். எடுத்த நரம்பு ஒன்ருென்றை நீக்கிக் காணுவது பழைய தோர் இசைத் தமிழ் மரபே யாம். இதனை முன்னர் இசை நூல் வல்லார் மூர்ச்சனை என்றனர். குரல் முதல் தார மீருக. மதுமாதவி என்னும் பண்ணும். இக் காலம் இப் பண் மத்யமாவதி என வழங்கி வருகின்றது. இவற்றிற்குச் செந்தி றம் என்பதும் பழைய பெயரே. செந்துருத்தி என்பது மிதுவே. சுந்தரர் தேவாரம், மீளாவடிமை எனும் பதிகம் செந்துருத்தி யன்ருே? அப் பண்ணை மத்தியமாவதியில் பாடுவதே பொருத்த மாகும். துத்தம் முதல் குர லீருக இசைக்க, இந்தளம் என்னும் பண் ணுகும். இக் காலம் நம் நாட்டின் ஹிந்தோள ராகமே பழைய இந்தள மாகும். இனி, இந்தளப் பண்ணி லமைந்த தேவாரப் பதிகங்களை நம் நாட்டு இந்தோள ராகத்திற் பாடுவதே பொருந்தும். ஆனல், இவ் விந்தளத்திற்குச் சுத்த தைவதமே வருமென் பதை இசையாளர்கள் அறியவேண்டும். நம் நாட்டுஇசை வாணரிற் சிலர் இந்தளப் பண்ணைக் கரகரப்பிரியாவில் பிறப்பாகக் கொண்டு, சதுசுருதி தைவதத்துடன் பாடு கின்றனர். சுத்ததைவதங் கொண்டு பாடுவதே பழைய முறை யாகும், உழை முதலாகத் துத்த மீருகத் தோன்று வது சாதாளி என்ற பண் ணுகும். இதுவே இக் காலம் சுத்த

சாவேரி ராக மாகும். இளி முதல் உழை வரைத் தோன்றும் பண் தனுசி யாகும், இஃதே இக் காலம் சுத்ததன்யாசி யென்பது. இப் பண்ணுக்கு உதயரவிச்சந்திரிகா என்று வேறு பெய ரொன்றும் இக்காலத்தி லுண்டு, இதுவரைக் குறித்த பழைய ஐந்து பண்களின் பெயர்களையும் இக் கால வழக்கப் பெயர்களையும் ஒருங்கு எழுதிக் காணுவாம்,

| | |
|---|---|
| க. இராமகிருதி. | க. மோகனம். |
| உ. (மதுமாதவி) செந்திறம் | உ. மத்யமாவதி. |
| ங. இந்தளம். | ங. இந்தோளம். |
| ச. சாதாளி. | ச. சுத்தசாவேரி. |
| ரு. தனுசி. | ரு. சுத்த தன்யாசி. |

இக் காலம் போன்றே பழங் காலத்திலும் ஒரு பண்ணுக்கு இரண்டு பெயர் உள்ளன வென அறிகின்றோம். எடுத்துக்காட்டாக, இந்தளம் என்ற பண்ணுக்கு வடுகு என்ற பெய ரொன்றும் உண்டாம். மேலும், இந்தளமும் சாதாளியும் அகநிலை புறநிலையா யமைந்துள்ளன. ஆகவே, பிங்கலந்தை நிகண்டு நாலிற் கூறிய நூற்றுமூன்று பண்களில் இவ் வைந்து ஐந்திசைப் பண்களும், அஃதாவது, இந்தளம், சாதாளி, தனுசி, இம் மூன்றை விடுத்து மற்றைய இரண்டு பண்கள், இராமகிருதி இராமக்கிரி யெனவும் மதுமாதவி செந்திற மெனவும். பெயர் மாறுபட்டுக் காணப் படுகிறது. பெயர்கள் எத்துணை மாறுபா டெய்தினும், இசை (ஸ்வர) த் தானங்கள் அன்றும் இன்றும் இனி என்றும் ஒன்றேதா னென்பதை இசை யறிவுடைப் பெரு மக்கள் யாவரும் அறிவாராக! இனிப், பழைய ஐந் திசை யின் பெயர்களை நிரலாக எழுதி, எழுத்தளவிற்றோனே. அவற்றி னமைப்பை ஒருவாறு காணுவாம்.

| அமைப்பெண் | க. | உ. | ங. | ச. | ரு. | பண்கள் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| முதலாவது | தாரம் | குரல் | துத்தம் | உழை | இளி | மோகனம் |
| இரண்டாவது | குரல் | துத்தம் | உழை | இளி | தாரம் | மத்யமாவதி |
| மூன்ருவது | துத்தம் | உழை | இளி | தாரம் | குரல் | இந்தோளம் |
| நான்காவது | உழை | இளி | தாரம் | குரல் | துத்தம் | சுத்தசாவேரி |
| ஐந்தாவது | இளி | தாரம் | குரல் | துத்தம் | உழை | சுத்த தன்யாசி |

மேற் காட்டிய நிரல் வகையை ஒவ்வொரு வரிசையையும் மேலிருந்து கீழ்நோக்கிக் கண்டாலும், இடமிருந்து வல மாகக் கண்டாலும் ஒரே ஒற்றுமைப்பா டெய்துவதைக்

காண்கின்றோம். இம் முறை ஏற்றம் என இசைத் தமிழிற் கூறுவர். இக் காலம் ஆரோகண முறையெனக் கூறுகிறோம். இந் நிரலையே, கீழிருந்து மேல் நோக்கிக் காணுவதும், வலமிருந்து இடமாகக் காணுவதும் பழைய காலத்தில் இறக்கம் எனப்பட்டது. இக் காலம் அவரோகண முறையெனக் கூறுகின்றோம்.

இவ் வமைப்பினுள் பல்வேறு நுட்பங்களுண்டு. அவை, இராமகிருதி இறக்க முறையை (அவரோகணம்) ஏற்ற முறையாக் கொள்ள இந்தளப் பண்ணாகும். இந்தளப் பண்ணின் இறக்க முறையை ஏற்ற முறையாகக் கணிக்க, இராமகிருதி யாகும். இம் முறையே, சாதாளியின் இறக்கம் ஏற்றமாகுமிடத்துத் தனுசி யாகும். தனுசியினிறக்க விசை ஏற்றமாகுங்கால் சாதாரி யாகும். இவற்றுள், செந்திறம் (மதுமாதவி) எனும் மத்யமாவதிப் பண், ஏற்ற விசை இறக்க விசையானாலும், இறக்க விசை ஏற்ற விசையானாலும், தனது உருத்திரிபுறாது செந்திறமாகவே நிற்கும். இந் நுட்பங்கள் பலவும் அளவொற்றுமையினாலேற்படுவவாகும்.

நாம் இதுகாறும் எழுதியவாறு, பழைய கால இசைத் தோற்ற வரலாறும், ஐந்திசையினமைப்பும், அவற்றான் பிறந்த ஐந்து பண்களின் பழைய புதிய பெயர்களும் நம் பொழிலன்பர்கள் ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். இவற்றின் நுட்பம் யாவும் யாழ்நூலினுட் கூறப்பட்டுளது. இவ் வைந்து பண்களையும் பின்னர், திறம் எனக் கூறப்பட்டது. ஆனால், இவற்றிலிருந்தே இசைக் கலை வளரத் தொடங்கியது. இவ் வைந்திசை யமைப்பை நன்கு கருவிகளி லிசைத்தும், கண்டத்தாற் பாடியும் பலநாள் ஆராய்ந்தும் விளங்கிய நம் தமிழ் நாட்டுப் பழந் தமிழர்கள் இவ் விசை யிடங்களை நுணுகி யாராய்ந்து, இரண்டு இசை புதிதாகச் சேர்த்து ஏழிசை யாக்கினர். பின்னர், வில்யாழ் போன்ற கருவிகளுக்கும் இருநிரலுக்குப் பதினான்கு நரம்பு கட்டப்பட்டிருத்தல் கூடும். பெரும் பண்களும் தோன்றின. இசைக் கலை வளர்ச்சி யடைய, பல்வேறு வகை யாழ்க் கருவிகளும் தோன்ற ஏது வாயின. அடுத்த இதழில் ஏழிசை யமைப்பை எழுதுவாம்.

# தமிழ் எழுத்துக்களும் அடையாளங்களும் *

வித்துவான், M. குஞ்சிதபாத தேசிகர், தமிழாசிரியர்,
உயர்நிலைப்பள்ளி, நன்னிலம்.

(முற்றொடர்ச்சி துணர் 24. மலர் 3. பக்கம் 104.)

தமிழ் மக்கள் தங்கள் கருத்தை முதன் முதலில் ஒருவருக்கொருவர் செய்கையால் (குறிப்பாலும்) உணர்த்தி வந்தனர். (சித்திரம்) ஓவியமாக எழுதி வந்தனர். பின்னர், சிலவற்றிற்கு இன்ன அடையாளம் என்று எழுதினர். இவற்றிற்கு ஒலியால் எழுத்தமைத்தனர். அதன் பின்னர் ஒலி வடிவிற்கு வரி வடிவு அமைத்துள்ளார்கள் என்று கருத இடமுண்டு.

(1) சித்திரங்களாகிய எழுத்து.
(2) சிலவற்றை குறிக்கும் அடையாளங்களாகிய எழுத்து.
(3) இசைக்கும் இசை எழுத்து.
(4) வரிவடிவாகிய எழுத்து.

என நான்கு வகையான எழுத்துக்களாய் நம் நாட்டி லிருந்தன என்று பின் வரும் இலக்கணச் சூத்திரங்களால் அறியலாம்.

"உருவே யுணர்வே யொலியே தன்மையென
இரு வகை யெழுத்து மீரிரண்டாகும்."

"காணப்பட்ட வுருவ மெல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவிலோ வியன் கைவினை போல
எழுதப் படுவ துருவெழுத் தாகும்."

"கொண்டவோர் குறியாற் கொண்ட வதனை
உண்டென் றுணர்த்துவ துணர்வெழுத் தாகும்."

"இசைப்படு புள்ளி னெழாஅல் போலச்
செவிப் புலனாவ தொலி யெழுத்தாகும்."

“ முதற்கா ரணமுந் துணைக்கா ரணமும்
துணைக்கா ரணத்தொடு தொடரிய வுணர்வும்
அவற்றொடு புணர்ந்த வகத்தெழு வளியின்
மிடற்றுப் பிறந் திசைப்பது தன்மை யெழுத்தே. ”

இச் சூத்திரங்கள் இலக்கணக் கொத்திலும் யாப்பருங் கல விருத்தியிலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

எழுத்துக்கள் நம் நாட்டிலே அல்லாமல் சைனு முதலிய பிற நாட்டிலும் சித்திரம் அறிகுறி முதலியன உண்டாகிப் பின்னர் நாகரீகம் முதிர முதிர எழுத்துக்கள் உண்டாகி யுள்ளன என அறிகிறோம். ஆகையால் முதன் முதலில் பல வடிவங்களாக எழுத்தை யறிவித்து வந்து, பின்னரே வரிவடிவான எழுத்தை வரையறுத்துள்ளார்கள் என்று ஊகிக்க இடந்தருகிறது. எழுத்திற்கு வரிவடிவம் ஒலி வடிவத்தைக் குறிக்கவே எழுந்துள்ளன. ஆகவே, ஒலி வடிவம் முந்தியது. ஒலி வடிவத்தில் முற்காலம் முதல் இன்று வரையில் வேறுபட்டதாகத் தெரியவில்லை. வரி வடிவமோ எனின் பலவித வேறுபாடு பெற்றிருக்கின்றன. தொல்காப்பியத்தைக்கொண்டு ஆராயின் எழுத்துக்களின் வரிவடிவ வேறுபாடு பின் வருமாறு தோன்றும்.

தொல்காப்பியர் கொள்கையின்படி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உயிர் | அ | முதல் | ஔ | ஈருக | 12 |
| மெய் | க் | முதல் | ன் | ஈருக | 18 |
| | | | | ஆக | 30 |

இவ் வெழுத்துக்களின் கூட்டுறவால் சார்ந்து வரும் குற்றிய லிகரம் குற்றிய லுகரம் ஆய்தம் என 3

ஆக 33

அவை முறையே,
எழுத்தெனப் படுப,

அகர முதல னகர விறுவாய் முப்பஃதென்ப
சார்ந்து வரன் மரபின் மூன்றலங் கடையே,
அவை தாங்,
குற்றியலிகரங் குற்றியலுகரம் ஆய்த மென்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன.

ஆகிய முப்பத்து மூன்றுமே தமிழில் கொண்டுள்ளார். இவற்றுள் முப்பத்தொன்றே எழுத்துக்கள். எவ்வாறெனின் உயிர் 12, மெய் 18, ஆய்தம் 1 — 31

தொல்காப்பியருக்குப் பின் வந்த உரையாசிரியர் தமிழ் மொழியின் தன்மையையும் தொல்காப்பியரின் கருத்தையும் உணராமல் 33-ம் ஒரே தன்மையன என்பார்.

ஒரே சூத்திரத்தில் 33 என்று கூறிவிடாமல் மூன்றுமல்லாத விடத்து என்றும் தனியான சூத்திரமும் கூறியது என்னை என ஆராயின்,

குற்றியலிகரம் : (1) அ இ கலந்த ஒரு வித ஒலி
குற்றியலுகரம் : (2) வடமொழியில் வந்துள்ள ரு, லு, போலுள்ளது.
ஆய்தம் : (3) சேர்ந்த எழுத்தின் தன்மையை அடைந்து ஒலிக்கும் ஒருவித ஒலியாம்.

என்ற கருத்தால் எழுத்துக்களுடன் சேர்த்தும் சேராமலும் 'எழுத்தோரன்ன" என்ற தொடரால் விளக்கியுள்ளார்.

இதனை தமிழ் எழுத்தொலி கற்போர் பண்டை 'எழுத்து நாலுணர்ச்சியின்றி இதுவரை முயன்றமையால் சார்பெழுத்தின் தன்மை அறியாதிருந்தனர். உரையாசிரியர்களும் அவ்வாறே. திருவாளர் நாயக்கரவர்களின் பேருதவியால் சார்பெழுத்தின் றன்மை தமிழர்களுக்கு விளங்குவதாயிற்று.

சார்பெழுத்தாவன :—குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்பன. குற்றியலிகரம் இகரக்குறுக்க மன்று. 'கேண்மியா' என்ற சொல்லின் மகரத்தின் மேலுள்ள இகரம் நேர் குற்றியலிகரம் அகரத்திற்குப் பின் கலப்பதால் எழுகின்ற ஒலியே 'Man' என்ற ஆங்கிலச் சொல்லின்

நடுவே 'ரு' 'லு', என்னும் ஒலிகளிலுள்ள உயிரொலிக ளாம். ஆய்தம் என்பது எழுத்தோசைக்குக் காரணமாகிய மூச் சொலியே யாகும். அது சார்ந்த ஒலியின் றன்மையோ டொத்தியலும் அதனைத் தகரத்தின் முன் சேர்க்கும்போது தகரத்தின் ஒலி மென்மை அடையும். அவ்வாறு ஆய்த மூந் தகரமுங் கலந்த வொலி அரபி முதலிய மொழிகளில் மிகுதியும் வழங்குகிறது. இவ்வாறு கொள்ளாது ஆய்தத் தின் ஒலிவடிவம் அது இகரத்தின் முன் சேரும்போது உண்டாகின்ற ஒலியேயாம் என்று பிற்காலத்தார் மயங்கக் கொண்டனர், அதனுல் ஆய்தத்தின் பெரும்பயனைத் தமிழர் அறியாது போயினர். குற்றியலிகரம் உயிரொலிகளோடு கலத்தல் தமிழ் மொழியிற் கிடையாது. பிற மொழியி லுண்டு. அவ்வாறே குற்றியலுகரம் வல்லின மெய்யின் மேல் மாத்திரம் தமிழ் இயல் நூல்களுட் குறித்த முறையில் ஊர்ந்து வரும். வடமொழியிலோ ரகர வகர மெய்களிலும் ஊர்ந்து வருகின்றது. ஆங்கில முதலிய மொழிகளிலோ அது பிற உயிரொலிகளோடுங் கலந்து வருகின்றது. ஆய்தம் தனி எழுத்தொலிகட்குப் பின் கலத்தல் தமிழில் இல்லை. வடமொழி முதலியவற்றில் அது அவைகளின் உடன் கலத்தலும் பின் கலத்தலும் காணப்படும். தனி யொலிகள் முப்பதும் தமிழ் நெடுங் கணக்காக அமைந்த சீர்மை உலகிற் பிற எம்மொழிக்குங் கிடையாது. சார்பொலிகள் கலக்கின்ற முறை தமிழில் மிகச் சுருக்கம். பிற மொழிக ளுள் அவை தமிழினும் விரிவுடையன. இதனை உணராமை யால் பலர் தமிழானது எழுத்தொலிகள் குறைந்த மொழி யென வறிதே பிறழக் கூறுவர். அவர் தமது எழுத்தொலி நூல் அறியாமையைப் புலப்படுத்தினவர் ஆவர் என உயர்திரு. **மாணிக்க நாயக்கர்** அவர்களின் நுட்ப மிகுதியை உள்ளிட்டு **கா. சுப்பிரமணிய பிள்ளை** M. A., M. L., அவர்கள் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் முன்னுரையில் வரைந் துள்ளார்.

எழுத்ததிகாரத்தில் 12-வது சூத்திரமாகவுள்ள "அவ் வியல் நிலையும் ஏனை மூன்றே" எனப் பிரித்து, சார்பெழுத்து மூன்றிற்கும் தனியே கூறுவதாலும் தொல்காப்பியர் கருத்து மேற் கூறிய சார்பெழுத்தின் தன்மை தனி என்பதை வலியுறுத்தா நிற்கும்.

(தொடரும்)

# திருக்குறள்
## பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர்: கொக்குவில் திரு. வ. பொன்னையா, B.A. (Hons.), Ph.D.

(முற்றொடர்ச்சி: துணர் 24, மலர் 4, பக்கம் 100.)

### துறவறவியல்.

மேற் கூறிய இல்லற வியலில் சொல்லப்பட்ட பசு நல் வினைகளைச் செய்து, தீ வினைகளை யொழித்து நின்றானது அறிவின்கண் அவ் விரு வகை வினைகளும் பசு போதம் முனைத்துச் செய்யப்படுவன வாகலான், பிறப் பிறப்பினையே தரும் என்பது உணர்ந்து, அவற்றினும், அவற்றின் பயன் களினும் ஒப்ப உவர்ப்புத் தோன்றின், இத் துறவே ஏது வாக அவன் வீடுபே றடைதற்கு முயன்றானபின், அவனுக் குரித் தாய அறமே துறவற மாகும். இப் பசு நல்வினை தீ வினைகளை ஒப்ப நோக்கி நிற்பானுக்குச் சிவபுண்ணியக் குறி உண்டாகவும், அது காரணமாக அவன் ஞானுசிரி யனைத் தலைப்பட்டுத், தீக்கைப் பேறும் ஞான சாதனப் பேறும் பெறும் பொருட்டும், அருளுடைமை, புலா லுண் ணுமை யென்னும் இரண்டு சாதனங்களைத் தருவாராய், அவற்றை இரண் டதிகாரங்களாற் கூறி, அதன் பின்னர் அஞ் ஞானு சிரியனுர் பெறுந் தவத்தினை ஓ ரதிகாரத்தாற் கூறி, அத் தவத்தான் ஞானம் விளங்கி, ஞேயங் காட்சிப் படுதற்குக் கூடா வொழுக்கம் (தவிர்தல்), கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னு செய்யாமை, கொல்லாமை என்னும் ஆறு துணைச் சாதனங்களைத் தருவான் புக்கு, அவற்றை ஆ றதிகாரங்களாற் கூறி, இவை செய்து மும் மலங்களையுங் களைந்து நின்றாற்கு ஞேயங் கூடிய வழியும் இடை யிடையே தாக்குவன வாகிய மல வாசனைகளை நீக்கும் உபாயந் தரு முகத்தானே நிலையாமை, துறவு, மெய் யுணர்தல், அவாவறுத்தல் என்னும் நான்கு துணைச் சாத னங்களை நான்கு அதிகாரங்களாற் கூறி, ஆகப் பதின்மூன் றதிகாரத்ததாய்த் துறவற வியலை வைத்து முதற்கண் அருளுடைமை கூறுகின்றார்.

### அருளுடைமை.

அருளுடைமை யாவது எல்லா வுயிர்கண் மேலுஞ் செறிப்பச் செறிவ தாகிய தோர் ஈர முடைமை. உடைமை யென்னுஞ் சொல் உடைப் பொருளையும், உடைமைத் தன் மையையும், உடைமைச் செல்வத்தினையும் அகப்படுத்தி

நிற்குமெனின், ஈண்டு அது உடைமைச் செல்வத்தையே உணர்த்திற்றென்க. இச்செல்வம் நுகரப்படாதே அதனையுடையானை அவன் நினைவு மாத்திரையான் இன்புறுத்தற்கேதுவாய தோர் பற்றுள்ளமாகலான், இது நுகரப்படும் இயல்பிற்றாகிய உவகைச் செல்வத்தினும் வேறுதல் காண்க. இன்னும், இது நினையுங்காற் றோன்றியும் நினையாக்கால் மறைந்தும் நிற்ப தொன்றாகலான், நிலைபேறுடைய உவகைச் செல்வத்தினும் வேறாகு மென்க. இதனியல்பை, 'அதுச்சொல் வேற்றுமை யுடைமையானும்' என்றற் றொடக்கத்துச் சூத்திரத்துச் சேனாவரைய ருரையானும், 'ஆங்கவை யொருபாலாக' என்றற் றொடக்கத்துச் சூத்திரத்துப் பேராசிரிய ருரையானும் வடநூ லிலக்கணங்களானுங் கண்டு தெளிக.

இனி, இச் சாதனத்தை வீடுபேற்றின் பொருட்டுத் துறவை மேற்கொண்டா ராவார் செய்யும் அறமாக வைத்தா ரென்பதனானும், இன்னும் பிறப் பிறப்புக்களைக் கொடுக்குந் தண்ணீர்ப் பந்தர் வைத்தல் முதலிய இடையீடுபட்டனவுங் காயத்தாற் செய்யப்படுவனவு மாய உலக வினைகள் போலாது, இது பல்லுயி ரனைத்தையும் ஒப்பப் பார்த்தற்கண் சுரந்த அருளே காரணமாகத் தோன்றி, மனத்தாற் செய்யப்படுவதும் இடையீடு படா நினைவிற்றாயது மாகிய அறம் என்பதனானும், இதனை யாசிரியர் பசு நல் வினையாகக் கொள்ளாது, சிவ புண்ணிய மாகவே கொண்டா ரென்றும், இதனலாம் பயனுஞ் செய்வார் மாட்டு வீடுபே றடைவிக்கும் பொருட்டு ஞான சாதனத்தைத் தோற்றுவித்தலும் உட லூழா யொழிவது மன்றி உயிரூ ழாகா வென்றுங் கொள்க.

இனி, அருளுடைமை, பொருளுடைமையினும் இலக்கணத்தாற் சிறிது வேறுபடுதல் காட்டுதும், அரு ளென்பது ஓருயிரோடு ஒற்றுமைப்பட்டு நிற்குங் குண மாகலான், அருளுடைமை யென்பது அக் குணத்தைப் பற்றிநின்று எழுவ தாகிய அவ் வுயிரின் பற்றுள்ளம் என்னும் பொருள் தந்து நின்று இரண்ட னுருபும் பயனு முடன் றொக்க தொகை யாதல் காண்க. அவ் வகை யன்றிப் பொருளென்பது அவ் வுயி ராகிய குணிக்கு வேற்றுமைப்பட்டு நிற்கும் வேறொரு குணி யாகலான், பொருளுடைமை யென்பது அவ் வுயிர்க்கு வேறான பொருளான் விளக்கப்படுவதாகி நிற்கும் பற்றுள்ள மெனப்பட்டு, மூன்ற னுருபும் பயனு முடன் றொக்க தொகையாமாறு காண்க. (தொடரும்.)